**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No**.110/2016 திரு.மோகன் வா.சா.1

**வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

கலைச்செல்வன், சுபா ஆகியோரை தெரியுமா என்றால், தெரியும். சுபாவின் கணவர் பெயர் ராஜு. வா.சா.ஆ.1 சொத்து சரோஜாவிற்கு முழுவதுமாக பாத்தியம் என்றால், சரிதான். அது 15 ஏக்கர் 8 செண்ட் என்றால், சரிதான். செப்டம்பர் 2012 முதல் பிரதிவாதிக்கும், இரண்டாம் பிரதிவாதிக்கும் ஏற்பட்டதாக சொல்லப்படுகிற கிரயஉடன்படிக்கை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அந்த கிரயஒப்பந்தமும் பதிவுசெய்யப்பட்டதா அல்லது பதிவுசெய்யப்படாத என்று தெரியாது என்றால், சரிதான். வா.சா.ஆ.2 பதிவுசெய்யப்படாத கிரய ஒப்பந்த பத்திரம் என்றால் சரிதான். அது 07.12.2012 ல் 5 மாத காலகெடு வைத்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 1 ஏக்கருக்கு ரூ.14,75000/- என்று பேசப்பட்டு, ரூ.10 லட்சம் அட்வான்ஸ் பெறப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த கிரய ஒப்பந்தம் எனக்கும், சுபாவிற்கும் பொது அதிகார பத்திரம் எழுதப்படுவதற்கு முன்பு ஏற்பட்டது என்றால், சரிதான். வா.சா.ஆ.2-ல் பக்கம் 2-ல் செப்டம்பரில் ஏற்பட்டதாக சொல்லும் கிரய ஒப்பந்தம் தேதி குறிப்பிடபடாமல் இடம் விடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.2 ல் சுவாதீன ஒப்படைக்கப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.2 ல் 60 நாட்களுக்குள் ரூ.40 லட்சம் மறுபடியும் செலுத்தவேண்டும் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதன் படி 60 நாட்களுக்குள் ரூ.40 லட்சம் செலுத்திவிட்டேனா என்றால், சரிதான். பின்னிட்டு மொத்தமாக கொடுத்துள்ளேன். ரூ.40 லட்சம் கொடுத்ததுப்போல் வா.சா.ஆ.2 ல் இல்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.2 ன் படி 5 மாதம் முடிந்தபிறகு வழக்கறிஞர் அறிவிப்போ, அல்லது வழக்கோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் பஞ்சாயத்தில் அனுமதி பெறுவதும், என்னுடையது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.3 ல் இரசீதில் ரூ.30 லட்சம் கொடுக்கப்பட்டதாக நானாக என்னுடைய வசதிக்கா தயார் செய்து கொண்டேன் என்றால், சரியல்ல. எனக்கு வங்கி கணக்கு சேலத்தில் கனரா வங்கியில் இருக்கிறது. அந்த வங்கி கணக்கின் மூலம் காசோலை, செக் மற்றும் ஆன்லைன் பணம்

ஏதேனும் அனுப்பியுள்ளேன் என்றால், இல்லை. அவ்வாறு வா.சா.ஆ.3-ன் படி பணம் அனுப்பியிருந்தால், அதை வங்கி கணக்கு மூலம் அனுப்பியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து மாதாம்பாளையம் கிராமம், பவானிசாகர் பஞ்சாயத்து எல்லைக்குட்ப்பட்டது என்றால், சரிதான். தாவா சொத்து சத்தியமங்கலம் தாலுக் என்றால், சரிதான். மாதம்பாளையத்திற்கும், சிறுமுகைகிற்கும் இடையே 30 கிலோமீட்டர் இருக்கும் என்றால், 20 கிலோமீட்டர் இருக்கும். முதல்விசாரணையில் சிறுமுகை பஞ்சாயத்தில் அனுமதிபெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். வழக்குரையிலும் அவ்வாறே குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். சத்தியமங்கலம் தாலுக்கா என்னும் போது சிறுமுகையில் அனுமதி வாங்கியதாக சொல்வது பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. நான் வருமானவரி செலுத்திவருகிறேனா என்றால், ஆமாம். 2013-2014 விற்கு வருமான வரி செலுத்தியிருக்கிறேன். இந்த வழக்கில் சொல்லியுள்ள ரூ.1 1/2 கோடிக்கு வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால், செலுத்தவில்லை. வா.சா.ஆ.4-ல் சுவாதீனம் ஒப்படைக்கப்படாத பத்திரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதில் ரூ.10 லட்சம் செலுத்தி 3 வருடம் காலகெடு கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த தொகை செலுத்தியதற்கும் வங்கி கணக்கு ஆதாரம் இல்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.4-ன் படி சுவாதீனம் என்னிடம் இருப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.4 ல் குறிப்பிட்டுள்ள மீத தொகை ரூ.9 லட்சத்தை செலுத்தப்பட்டுள்ளதா என்றால், இல்லை. ரூ.9 லட்சம் கட்டாப்படாதற்கு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.4 ல் 2 வது சாட்சியாக போடப்பட்டுள்ளது அன்புமணி எனது மாமா. வா.சா.ஆ.4 ல் 17.04.2013 ம் தேதியன்று ஆவண எண்.2471/2013 மதியம் 3 முதல் 4 மணிக்கு பதிவுசெய்யப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதே தேதியில் பொது அதிகார பத்திரம் வா.சா.ஆ.5 எழுதப்பட்டுள்ளது என்றால், பொது அதிகாரம் பத்திரம் ஆவண எண்.2470/2013 முதலில் எழுதினோம், அதன்பிறகு வா.சா.ஆ.4 ஐ எழுதினோம். இரண்டு ஆவணங்களிலும், அன்புமணி கையெழுத்து போட்டுள்ளார் என்றால், சரிதான். இரண்டாவது சாட்சி இரண்டாம் பிரதிவாதியின் கணவர். வா.சா.ஆ.5-ல் சரோஜா என்ன வியாபாரத்திற்காக அடிக்கடி வெளியே போவார் என்று எழுதவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.5-ன் படி சரோஜா சுவாதீனத்தில் இருப்பதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். சரோஜான சுவாதீனம் ஒப்படைத்ததாக எழுதப்படவில்லை என்றால்,

சரிதான். வா.சா.ஆ.5-ல் எனக்கு செய்ய வேண்டிய வேலைகள் மட்டும் தான் குறிபிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.5-ல் ரொக்கமாகவோ, அல்லது காசோலைகயாகவோ பணம் பெற்றுகொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். கணக்கு வழக்கு பராமரித்து கேட்கும் போது கணக்கை ஒப்படைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கணக்கு வழக்கை தாக்கல் செய்துள்ளேனாஎ ன்றால், இல்லை. கணக்கு வழக்கை ஆதாரமாக கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. இரசீது தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.5-ன் படி உங்களிடம் இருந்து எந்தவிதமான பிரதிபலன் தொகை எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை என்று கடைசி பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.5-ல் சொத்துவிவரத்தில் 15 ஏக்கரையும் பிரித்தாக எழுதப்பட்டுள்ளது என்றால், எங்களுக்கு கொடுத்தது 225 சைட். ஏக்கர் விவரம் குறிப்பிடபடவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.5-ல் ரத்து செய்யப்பட்டதக்கது அல்ல வட்டியுடன் கூடிய பொது அதிகாரம் என்று எழுதப்படவில்லை என்றால், சரிதான். சமரச தீர்வு குறித்து சங்கதிகள் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். எந்த காரணத்தையும் கொண்டும் ரத்து செய்யப்பட்டதக்கதல்ல என்று குறிப்பிடபடவில்லை என்றால், சரிதான். பொது அதிகார பத்திரத்தின் படி யார் உரிமையாளர் என்றால், பவர் வாங்கிய பிறகு நான் தான் உரிமையாளர். பொது அதிகார பத்திரம் உரிமைமாற்று ஆவணம் அல்ல என்றும், அவர்களது வசதிக்களுக்காக ஏற்படத்தப்பட்டது என்றால், சரிதான். வா.சா.ஆ.5 லிம் எனது மாமாவும், 2-ம் பிரதிவாதியின் கணவரும் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால், சரிதான். பொது அதிகார பத்திரத்தின் படி நான் உரிமையாளர் இல்லை என்றும், சரோஜாதான் உரிமையாளர் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.7 பொது அதிகார பத்திரத்தின் ரத்து பத்திரம் என்றால் சரிதான். அதை நான் தான் தாக்கல் செய்துள்ளேன். அதில் பொது அதிகார பத்திரத்தின் படி கணக்கு வழக்குகள் ஒப்படைக்கவில்லை என்றும், விருப்பத்திற்கு மாறாகவும், விரோதமாகவும், பவர் ஏஜேன்ட் தொடர்பில் இல்லாமல் இருப்பதாலும், தற்போது தேவையில்லாத காரணத்தினாலும், ரத்து செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்,ச ரிதான். மொத்தம் 153 சைட் விற்று உள்ளேன். எவ்வளவு தொகை வாங்கியுள்ளேன் என்றால், ஞாபகம் இல்லை. வழக்குரையிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, குறிப்பிட்டுள்ளேனா என்றால், சரியல்ல. வா.சா.ஆ.8-ல் வழக்கறிஞர் அறிவிப்பை படித்து தெரிந்தபிறகு பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால், ஆமாம்.

வா.சா.ஆ.9 மூலம் கேன்சல் செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால், ஆமாம். அதன் பிறகு வா.சா.ஆ.10 பதில் அறிவிப்பினை நான் கொடுத்துள்ளேன் என்றால், ஆமாம். வா.சா.ஆ.6-ல் எங்கு டைப் செய்யப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால், சரிதான். அதிலும் 1 ம் பிரதிவாதியின் கணவர் கையெழுத்து போட்டுள்ளார் என்றால், சரிதான். வா.சா.ஆ.6-ல் இரசீதில் தேதி, மாதம் வருடம் குறிப்பிடபடாமல் இடம் விடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.6-ல் வாங்கிக்கொண்ட பணத்தின் விவரத்தை பொது அதிகார பத்திரத்தில் குறிப்பிடபடவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.6 விவரம் பொது அதிகார பத்திரத்தில் இல்லை என்றால், சரிதான். சாட்சி 17.04.2023 என்று கைஎயெழுத்து போட்டுள்ளார், அதனால் அந்த ஆவணம் அந்த தேதியில் எழுதப்பட்டது. வா.சா.ஆ.6-ல் பணம் எவ்வளவு கொடுத்தோம் என்று இல்லை என்றால், சரிதான். வருமான வரி தாக்கல் செய்ய வேண்டும் என்று குறிப்பிடபடவில்லை. சரோஜாவிடம் வெற்று பேபப்ரில் கையெழுத்து வாங்கிக்கொண்டு பின்னிட்டு அதிலுள்ள சங்கதிகள் என்னால், தயார் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. நான் உண்மையில் ரூ.1 கோடியே 20 லட்சம் கொடுத்திருந்தால் வா.சா.ஆ.6 ல் சொல்லியிருப்பேன் என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல. 153 சைட் விற்றுள்ளேன் எனும் போது ஒரு பத்திரத்தில் கூட தாக்கல் செய்யவில்லை என்றால், இல்லை. 03.06.2013-ம் தேதியில் வசந்தி என்பவருக்கு நான் ஒரு கிரயம் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால், சரிதான். அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.1** குறியீடு செய்யப்படுகிறது. 10.07.2013-ல் சத்தியாவிற்கு ஒரு கிரய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால், சரிதான் , அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.2** குறியீடு செய்யப்படுகிறது. அதே போன்று சண்முகம் என்பவருக்கு 18.11.2013-ல் கிரயம் செய்து கொடுத்துள்ளேன் என்றால், சரிதான். அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.3** குறியீடு செய்யப்படுகிறது. 12.08.2013-ல் சுகுணா என்பவருக்கு ஒரு கிரய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.4** குறியீடு செய்யப்படுகிறது. 10.09.2013-ல் சௌந்தர்ராஜன் என்பவருக்கு ஒரு கிரய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவது

என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.5** குறியீடு செய்யப்படுகிறது. 06.01.2014-ல் மரகதம் என்பவருக்கு ஒரு கிரய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.6** குறியீடு செய்யப்படுகிறது. 05.02.2014-ல் வெங்கடாச்சலம் என்பவருக்கு ஒரு கிரய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.7** குறியீடு செய்யப்படுகிறது. 11.10.2013-ல் ரெங்கநாயகி என்பவருக்கு ஒரு கிரய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.8** குறியீடு செய்யப்படுகிறது. 12.06.2014**-ல்** பல்கீஷ் பிவீ என்பவருக்கு ஒரு கிரய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.9** குறியீடு செய்யப்படுகிறது. அதில் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 ல் life certificate இல்லை என்றால், சரிதான். 10 ஆவணம் பதிவு செய்தால் ஒரு Certificate இருந்தால் போதும். பி.வா.சா.ஆ.4 முதல் பி.வா.சா.ஆ.7-ல் சரோஜாவின் கையெழுத்து நானே போட்டு தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8, பி.வா.சா.ஆ.9 ல் உயிருடன் உள்ளார்கள் என்ற certificate ல் மருத்துவரின் கைஎயழுத்து நானாக போட்டு தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உரிமையாளர் இல்லை என்றும், நான் விற்பனை செய்வதற்கு முழுஉரிமையும் எனக்கு கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. உரிமையாளராக அறிவிக்க வேண்டும் என்றும், நான் உரிமை மூலம் கேட்கவில்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கிறக்கு முகாந்திரம் இல்லை என்றால், சரியல்ல. நான் பொது அதிகாரத்தின் படி மொத்த தொகையும் செலுத்தவில்லை என்றும், சரியான கணக்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், பொது அதிகார பத்திரத்தின் படி நடந்துகொள்ளவில்லை என்றும், எனவே இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மருத்துவர் இரசீது சேலத்தில் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், சரோஜா ஒருநாளும் சேலத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால், சரோஜாதான் வாங்கி கொடுத்தார். சரோஜா சிறுமுகையில் தான் வசிக்கிறார் என்றும், ஒருநாளும் அவர் சேலத்திற்கு சென்று வாங்கிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

ஒ/ம்.திரு.மோகன் PW1

(ஒ/ம். N. Sharmila)

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.